**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**16 |
| Name | : | **லெட்சுமி** |
| Husband Name | : | **மாணிக்கம்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 50/2025 |

**தேதி : 15.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். லோன் வாங்கிகொடுத்த வகையில் எதிரியை எனக்கு தெரியும். எதிரியின் மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நிதி நிறுவனத்தில் என் பெயரில் லோன் வாங்கி கொடுக்க சொன்னார். நானும் மூன்று தனியார் நிதி நிறுவனங்களில் இருந்து சுமார் 1 லட்சம் கடனாக வாங்கிகொடுத்தேன். ஒரு நிதி நிறுவனத்தின் பெயர் காரையில் உள்ள துவாரா ஆகும். கடனுக்கான தவணை தொகைகளை எதிரியே கட்டிவிடுவதாக சொன்னார். லோன்காரர்கள் என்னிடம் வந்து பணம் கட்டசொன்னார்கள். அப்போதுதான் எதிரி தலைமறைவாகிவிட்டார் என்பது தெரியவந்தது. தற்போது தவணை தொகைகளை நான்தான் கட்டிவருகிறேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வசந்தி எனக்கு பக்கத்து தெருவில் குடியிருந்தார். எதிரி ஏற்கெனவே எனக்கு பழக்கம் இல்லை. இந்த கடன் எடுத்துகொடுத்த வகையில்தான் எனக்கு பழக்கம். எதிரி தனது மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லி கடன் வாங்கினார். எதிரியின் மீது இருந்த நம்பிக்கையில்தான் கடன் வாங்கிகொடுத்தேன் என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் கடன் வாங்கி கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. எந்தெந்த நிறுவனங்களில் கடன் வாங்கி கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. எதிரி எத்தனை தவணைகளளை கட்டியுள்ளார் என்று தெரியாது. எதிரி ஊரில்இல்லை என்பதால் நாங்கள் சென்று புகார் கொடுத்தோம். நாங்கள் 39 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.